


– வாழ்வோம்

புதையல் 2

தமிழ்-தமிழர், தமிழ்நாட்டிற்காகவும் குரல்கொடுத்த திராவிட இயக்க இதழ்களில் வெளியான, பல்வேறு காலங்களையும் தாண்டி நிலைத்து நிற்கும் சிறப்புமிக்க எழுத்துகளில் இருந்து சில பகுதிகள்...



திராவிடனே! அந்நாளை நினைத்துப் பார்!

"வாளை எடு! வாழ்வா? சாவா? என்பதைப் போரில் புரிந்துகொள்வோம்" என்பதற்கு மட்டுமல்ல, "வாழ்விலோர் திருநாள்" பாடி, வளமார் நாட்டை வாழ்ந்திடவும் முரசு முழங்குவதுண்டு.

அந்நாள் ஆண்ட மறத்தமிழன் கனகனையும் விசயனையும் களத்தினில் சந்திப்பான். போர்முரசு கொட்டி புலிப்பாய்ச்சல் நடத்துவான். அந்த ஆரிய மன்னர் சிரம் நொறுங்க, கண்ணகி சிலைக்குக் கல்லேற்றி, சிங்க நடை போட்டு வருவான். இரத்தம் படிந்த வெற்றிமுரசின் ஒலியும் 'வாழ்க தமிழன்' என்ற கீதமும் இமயத்தில் எழுந்து, விந்தியத்தில் எதிரொலித்து, கன்யாகுமரியின் கடலோசைகளில் கலக்கும், வாடிக்கிடந்த காதலியை வெற்றிமுரசம் துள்ளியெழச்செய்ய - புதுத் துடிப்பால் பூரித்த இதயங்காட்டி பொன்னழகி வழிபார்த்து நிற்க, 'தென்றலே' என்னைத் தேடித் துவண்டாயோ? என்று வந்த காளை, வாய் திறப்பதற்குள்... மணவாளன் மார்பினிலே காயங்கண்டு பனிப்பார்வை வீசி, அவன் மலைத் தோளில் முகத்தை ஒட்டிக்கொள்ள - அந்த மகிழ்ச்சியை ஒரு கவிதையாக மாற்ற நினைத்து, எல்லைக்குள் அதை அடக்க முடியாமல் தோல்வியால் தொங்கிய முகத்துடன் ஒரு புலவன் திரும்பிவிட... இன்னணம் காதலும் வீரமும் கரைபுரண்டோடியது.

திராவிடத்தில் ஒரு நாள்! பழங்கதைதான்! ஆனால், பயனற்ற இன்றைய பாட்டிக் கதையல்ல! நம் பாட்டனும் பாட்டியும் வாழ்ந்த வரலாறு! பெற்றிருந்த பண்பு!

ஆரியர் உருட்டி விளையாடும் உருட்டுச் சட்டி பொம்மைகளாய் ஆங்கில ஏகாதிபத்தியத்தைவிடக் கொடிய வடவர் ஏகாதிபத்தியத்தின் வால் பிடிப்பவர்களாய் - சீரிளமைத் தமிழ் ஒழித்து, செந்தமிழ் நாடழிக்க இந்தி மொழிக்குப் 'பராக்கு' கூறும் சிப்பாய்களாய் இங்குள்ள தமிழர்கள் இருக்கும் காலத்திலேயே பொங்கல் விழா கண்டு நமக்கு பூரிப்பு தாங்கவில்லை யென்றால்.. காமராஜர்கள், சண்முகங்கள், ஜீவாக்கள் தோன்றியிராத அந்தக் காலத்தில், மானத்துக்கும் தமிழனுக்கும் நீங்காத தொடர்பு இருந்த அந்தக் காலத்தில் - களத்தில் ஈட்டியைச் சுவைத்து காதற்பரிசாக இதழ் சுவைத்துக் கிடந்த வீரப் பரம்பரை வாழ்ந்த அந்தக் காலத்தில் - பொங்கல் இப்படி சோற்றுப் பொங்கலாகவா இருந்திருக்கும்!

"அறுவடை முடிந்ததா அத்தான்?" என்று அவள் கேட்க "எதிரிகளின் படையை நம் மன்னர் அறுத்துக் குவிக்கும்போது, பகை மன்னன் மார்பிலிருந்து உருண்டோடிய மாணிக்கத்தைப் போல இதோ பார் நெல்மணிகளை!" என்று கணவன் பதில் கூறியிருப்பான். "அதோ பார் கொல்லையிலே ஆரியனின் வயிறுபோல வைக்கோற்போர்!" என்று காட்டியிருப்பான். "அத்தான், பதரைத் தூற்ற வேண்டாமா?" எனக் கேட்டு முறம் எடுக்கச் செல்பவளைப் பார்த்து, "கண்ணே! தமிழினத்தில் வந்து வந்து கலக்கும் ஆரியக் கொள்கைகளை அகற்றுவதுபோல் இந்தப் பதர்களையகற்று" என்று சொல்லியிருப்பான்.

திராவிடனே! அந்நாளை நினைத்துப்பார்! பசி, பசி என்று பச்சிளங்குழந்தை அழ... அது கண்டு பெற்ற தாய் அழ... "பொங்கலிலும் நாம் பட்டினிதானடா கண்ணே!" என்று தந்தை அழுகின்ற இந்நாளின் கோர நிலையையும் நினைத்துப்பார்!

கிரேக்க ரோமானிய நாடுகள், உன் நாட்டுப் பொருளுக்கு வாய் பிளந்து கிடந்தனவே! நீ ஒரு பிடி சோற்றுக்கும் ஒரு முழத் துணிக்கும் வாய் பிளந்து கிடக்கிறாயே!

இமயமும் இலங்கையும் உன் ஆணை கேட்டுத் தலை கவிழ்ந்தனவே! இன்று நீ அடிமையாக வாழ்கிறாயே! 'இனிமைத் தமிழ்மொழி எமது, எமக் கின்பந் தரும்படி வாய்ந்த நல் அமுது' என்று இசைத்தனையே - இன்று இந்திக்கும் தண்டனிடுகிறாயே!

சரித்திரத்தில் திரையிடப்பட்டுள்ள உன் பெருமைகளைக் கேட்டுப்பார்! வேங்கையொத்த பகைவர் எத்தனையோ பேர், உன் வேல் பட்டு வீழ்ந்தனரே - வீரமகனே! உன் கண்களிலே கனல் என்றால், எதிரியின் பாசறை தீக்கு இரை என்றுதானே பொருள்! உன் வீர முழக்கம் வேற்று மன்னன் கோட்டைக்கு வேட்டாயிற்றே! அவையெல்லாம் இன்னாள் எங்கே? கடல் கொள்ளாமல் - களம் புரண்ட ரத்த வெள்ளம் கொள்ளாமல் பகைவரின் - போர்த்திறங் கொள்ளாமல் - வீரத்தை விலை கேட்கும் ஆரியம் கொண்டது ஏன்?

இந்தப் பொங்கலில் உன் உள்ளம் பொங்கட்டும்! குன்றெடுக்கும் நெடுந்தோளான் குலத்தினனே! குள்ள நரிக் கூட்டத்தின் குணமறுக்கக் குறுவாள் எடு!

அந்நிலை மீளாதா? புதுவாழ்வு மலராதா? மலரும்! மலர வேண்டுமானால் திராவிடா! இந்தப் பொங்கலில் உன் உள்ளம் பொங்கட்டும்! குன்றெடுக்கும் நெடுந்தோளான் குலத்தினனே! குள்ள நரிக் கூட்டத்தின் குணமறுக்கக் குறுவாள் எடு! சாணிப்பிள்ளையாரும் சீனிப் பாயசமும் பொங்கலின் குறிக்கோளல்ல! கோணிக்கிடக்கும் சமுதாயத்தின் குறை தவிர்க்க முரசறைவாய்! போர் முரசறைவாய்!


"திடு திடும்!"

எழுந்தது முரசொலி! எம்மினத்தவரே! 'முரசொலி'க்கு உங்கள் ஆதரவு பொங்கட்டும்!

(முரசொலி தலையங்கம், 14.01.1948)

● பாரத் ஸ்ரீமன் அழகேசன் ●

கலகக்காரர் தலைஞர் 02



■ எழுத்து: **மகிழவன்,**
ஏஐ உருவாக்கம்: **ஆரிஃப் முகம்மது**

ஃப்ளாஷ்பேக்

சட்டமன்ற உறுப்பினராகத் தளபதி!



1989-ஆம் ஆண்டு இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய நம் கழகத் தலைவர் அவர்கள், சட்ட மன்ற உறுப்பினராக பொள்ளாச்சி கணி யூரில், கழகத்தின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவுக்கு வருகைதந்தார். அப்போது, தளபதி அவர்களைச் சந்தித்து வரவேற்றபோது எடுத்த படம். பொள்ளாச்சி நகரக் கழகச் செயலாளர் எஸ்.ராஜு, கழக நிர்வாகி உதயகுமார், ஜெயபால் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். அந்த காலகட்டத்தில், ஆத்துப் பொள்ளாச்சி கிராமத்தின் இளைஞர் அணி அமைப்பாளராக நான் செயல்பட்டுவந்தேன்.



வெ.பாலசுப்பிரமணியம்

– வெ.பாலசுப்பிரமணியம்,
முன்னாள் மாவட்டப் பிரதிநிதி,
ஆத்துப் பொள்ளாச்சி,
ஆனைமலை ஒன்றியம்.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

தெரிந்து கொள்வோம்

1940 அறிஞர் அண்ணாவுக்குக் கதை உரையாடல் எழுத முதல் வாய்ப்பு.

1952 சென்னை மாநகரம் ஒரே நாடாளுமன்றத் தொகுதியாக இருந்தது.

1954 புதுவை பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட்டம்! - கழகம் முன்னணியில் நின்றது.

1957 வடசென்னை - தென்சென்னை என இரண்டு தொகுதிகளாக்கப்பட்டது.

1958 நீதிக்கட்சியைச் சேர்ந்த, 1942-இல் மேயராகவும் இருந்த சக்கரை செட்டியார் மறைவு.

1958 இலங்கையில் தமிழர்கள் மீதான தாக்குதலுக்குக் குரல்கொடுக்கத் தொடங்கியது கழகம்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900